கே.எம்.சி.எச். நரம்பியல் துறை சார்பாக

# புதிய சிகிச்சை முறை அறிமுகம்

கோவை, மே. 12– கோவை மெடிக்கல் சென்டர் அண்டு ஹாஸ்பிட்டல் சார்பில் நரம்பியல் நோயான ஸ்பாஸ்டிசிட்டி (தசை நார் இறுக்க நோய்) சிகிச்சைக்கு புதிய முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கை, கால்களில் திடீரென விறைப்பு தன்மை ஏற்பட்டு கடுமையான வலியை உண்டாக்கும் ஒரு நரம்பியல் கோளாறு ஸ்பாஸ்டிசிட்டி என்பதாகும். நரம்புகளில் மோட்டார் நியூரான்களின் தீவிர செயல்பாட்டால், நீட்டி முறுக்கும் எதிர்விளைவால் இது உருவாகிறது. பக்கவாதம், செரிபரல் பால்சி, மோட்டார் நியூரான் கோளாறு, முதுகுத்தண்டில் அடிபடுதல், செர்விகல் மைலோபதி மற்றும் பரம்பரை ஸ்பாஸ்டிக் கோளாறுகள் தான் இந்த நிலையை உருவாக்குகிறது.

பேக்லோபன், டிசானிடின், டயசபாம், டேன்ட்ரோலின் ஆகிய மருந்துகள் ஓரளவுக்கு பயன் தரக்கூடியவை. இது ஆளாளுக்கு பயன் தருவதில் வேறுபடக்கூடியவை. மூளை அல்லது தண்டு வடத்தில் ஏற்பட்ட பாதிப்பை பொருத்தும் இந்த மாத்திரை மருந்துகள் பலனளிக்கும். மேலும் இது தூக்கத்தையும் வரவழைக்கக் கூடியது. போட்டுலினியம் எனும் தசை மீது போடப்படும் ஊசி மருந்தும் நல்லது.

சில சமயம் அறுவை சிகிச்சையால் மட்டும் தான் இறுக்கத்தை தளர்த்த முடியும். மூளையால் உருவாகும் ஸ்பாஸ்டிக் செரிபரல் பால்சி கோளாறுக்கு, ரிசோடமி சிகிச்சை உதவும். இது தசை இறுக்கத்தின் கூடுதல் செயலை குறைக்கும். இத்தகைய சிகிச்சைகள் இருந்தாலும் நரம்பியல் நிபுணர்களுக்கு சவாலான சிகிச்சை முறையாகத்தான் இந்த நோய் உள்ளது.

பேக்லோபென் பம்ப் பொருத்துதல் இதற்கு ஒரு தீர்வாக கருதப்படுகின்றது. இந்த சிகிச்சைக்கு ஒன்று முதல் ஒன்றரை மணி நேரம் தேவைப்படும். நோயாளிக்கு சாதாரண மயக்க மருந்து நிலையில் அடிவயிற்று தசைப்பகுதியில் இந்த பம்ப் பொருத்தப்படும். ஒரு ஊசி மூலம் தண்டு வட திரவத்தினுள் கழுத்தை நோக்கி செல்லும் வகையில் ஒரு கதீட்டர் பொருத்தப்படும். பின் இந்த கதீட்டர் தோலுக்கு அடியிலிருந்து வயிற்று பகுதியிலுள்ள பம்புடன் இணைக்கப்படும்.

இந்த பம்பினுள் பேக் லோஃபென் மருந்து நிரப்பப் பட்டிருக்கும். மேலும் இந்த பம்ப் கணினியுடன் இணைக்கப்பட்டு மருத்துவரின் பரிந்துரைப்படி குறிப்பிட்ட அளவு மருந்து தொடர்ச்சியாக செலுத்தப்படும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கும். இந்த பம்பினுள் மருந்தை ஆண்டுக்கொருமுறை நிரப்பினால் போதும்.

50 வயதான சேலத்தை சேர்ந்த சங்கரன் என்பவர் கடந்த 10 ஆண்டுகளாக கால், கைகளில் ஸ்பாஸ்டிக் நோயால் பாதிக்கப் பட்டிருந்தார். மோட்டார் நியூரான் நோயாலும் அவதிப்பட்டார். சரியாக தூக்கமின்றியும் இருந்தார். கடந்த வாரம் இந்த புதிய முறை சிகிச்சையான பம்ப் பொருத்தியவுடன் நிவாரணம் பெற்றார்.

இந்த நவீன சிகிச்சையை டாக்டர் அருள்செல்வன் மற்றும் டாக்டர் ராம் நாராயணன் ஆகியோர் மேற்கொண்டனர். கோவையில் இந்த சிகிச்சை முதன் முறையாகும். இதனை மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி பாராட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

கே.எம்.சி.எச். மருத்துவமனை உயர்தரமான சிகிச்சைகள் மற்றும் இது போன்ற புதுமையான மருத்துவ தொழில் நுட்பங்களை பிரயோகிப்பதில் வல்லமையுடன் தொடர்ந்து செயல்படும். இதன் மூலம் பல நோயாளிகள் அரிய சிகிச்சை பெற்று பயன் அடைவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.